செய்தி வெளியீடு எண்: 1028 நாள்: 29.12.2009

# கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை 400க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் செய்த சென்னை பில்ராத் மருத்துவமனை சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டு!

ஏழை எளிய மக்களைப் பாதித்திடும் கொடிய நோய்களிலிருந்து அவர்களைக் காப்பதற்காக இந்த அரசு மேற்கொண்டுவரும் பல்வேறு மருத்துவ நலத் திட்டங்களில் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் தமிழக மக்களிடம் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுப் பாராட்டுகளைக் குவித்துவருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுவரை 22 ஆயிரத்து 443 பேருக்கு 76 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தச் சிகிச்சைகளை அளிப்பதில் தனியார் மருத்துவமனைகளின் பங்கு மகத்தானது; பாராட்டத்தக்கது.

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் வெற்றிக்கு மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் சென்னை செனாய் நகரிலுள்ள 'பில்ராத்' மருத்துவமனை ரத்தினவடிவு என்ற ஏழை விவசாயிக்கு இத்திட்டத்தின்கீழ் முதல் இருதய அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்த மருத்துவமனை என்ற பெருமையுடன் இதுவரை 400–க்கும் மேற்பட்ட ஏழை எளியோருக்கு அறுவை சிகிச்சைகளைச் செய்து சாதனை படைத்துள்ளது. இதனையொட்டி, 'பில்ராத்' மருத்துவமனையின் இயக்குநர்கள் முனைவர் ஏ. நாராயணசாமி, தி. கோபி, அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் எஸ். தியாகராஜ மூர்த்தி, மயக்க மருந்து நிபுணர்கள் மருத்துவர் கே. நெடுமாறன், மருத்துவர் ஆர். மகாதேவன் ஆகியோர் இன்று (29.12.2009) முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப் படுத்தியமைக்காகத் தங்களது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தனர்.

அப்பொழுது, தங்களுடைய பில்ராத் குடும்பத்தின் சார்பில் "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், மிகச்சிறந்த முறையில் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்களின் ஆதரவோடு செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் வெற்றியடைவதற்கு முக்கியக் காரணமாகச் செயல்பட்டுவரும் முத்தமிழறிஞர் மாண்புமிகு டாக்டர் கலைஞராகிய தாங்களும், தங்கள் தலைமையின்கீழ் செயல்படுகின்ற தமிழக அரசும்தான் காரணம். மேலும், நல்லமுறையில் நடைபெற்றுவரும் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் எங்களையும் பங்குபெறச் செய்து 400–க்கும் மேற்பட்ட ஏழை எளியோர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய அரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தங்களுக்கு. எங்கள் பில்ராத் மருத்துவமனையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, தமிழ்நாட்டு மக்களுக்கு தாங்கள் செய்யும் சீரிய பணி மேலும் பல்லாண்டு காலம் தொடர எங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறி மகிழ்ந்தனர்.

* * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.